# திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம் உடையானந்தல் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை :- **P.தேன்மொழி** ஊராட்சி மன்ற தலைவர் நாள். **/03/2024**

பொருள்:- மனைப்பிரிவு -மாவட்ட ஊரமைப்பு அலுவலகம்.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம். **உடையானந்தல் கிராமம்**, புதிய சர்வே எண்கள்.**1/6B, 1/8A**-ல் ஏக்கர். **1.08** செண்டில் அமைந்துள்ள மனைப்பிரிவுக்கு அனுமதி தொடர்பாக மனை எண்கள். **01** முதல் **30** வரை மனைகள் விற்பனை செய்ய ஒப்புதல் அளித்தல் சார்பு.

**பார்வை :-**

1. மனுதாரர் விண்ணப்பம்.
2. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ 4 (3) துறை நாள்.**04.06.2004**.
3. அரசாணை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3) துறை நாள்.**04.06.2004**.
4. தலைவர் உடையானந்தல் ஊராட்சி திருவண்ணாமலை அவர்களின் தீர்மான எண்.**13/2024** நாள்.21/02/2024.
5. திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் **DTCP No.39/2024** நகல்.

மேற்படி பொருள் மற்றும் பார்வைக்கிணங்க திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், உடையானந்தல் கிராமம், புதிய சர்வே எண்.**1/6B, 1/8A**-ல் ஏக்கர்.**1.08**-ல் அமைந்துள்ள மனைப்பிரிவுக்கு ம.வ.ந.ஊ.உ.அ (தி.மலை) எண்.**39/2024** என எண்ணிடப்பட்டு தொழிற்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சிக்கு சாலைகள், மூலை முடுக்குகள் மற்றும் மின் மாற்றி அமைவிடம், பொது உபயோகம் அமைவிடம் ஆகியவைகள் தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே **DTCP APPROVAL No.39/2024** என்ற அனுமதி எண் மூலம் வழங்கப்பட்டுள்ள தொழிற்நுட்ப மனைப்பிரிவு வரைப்படத்தில் உள்ள மனை எண்கள்.1 முதல் 30 வரை உள்ள மனைகளுக்கு அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறையின் படி உடையானந்தல் ஊராட்சி அமைப்பு நில பயன் மற்றும் கட்டணம் 3 விழுக்காடு தொகை ரூ.**1,29,400/- (எழுத்தால் ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து ஒன்பதாயிரத்து நானூறு மட்டும்)** மற்றும் கூராய்வு கட்டணம் **ரூ.30,000/- (எழுத்தால் ரூபாய் முப்பதாயிரம் மட்டும்)** ஆகியவைகளை உடையானந்தல் கிராம ஊராட்சி நிதி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. அதனை தொடாந்து மனை எண்.**01** முதல் **30** வரை உள்ள மனைகளுக்கு தொழில் நுட்ப இசைவு அளிக்கப்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து பஞ்சாயத்து மூலமாக அனுமதிக்கப்படுகிறது.

**இங்ஙனம்,**

P. தேன்மொழி

**தலைவர்**
**உடையானந்தல் ஊராட்சி**

**இணைப்பு:-**

1. ஊராட்சிமன்ற தீர்மானம் நகல்-1
2. ரசீது

**பெறுநர்:-**

**திரு. சுரேஷ்** மற்றும் இருவர்,
கதவு என்: 83/38, சன்னதி தெரு,
திருவண்ணாமலை - 606601.